ஸ்ரீ:

ஸ்ரீமதே நிக₃மாந்தமஹாதே₃ஶிகாய நம:

ஸ்ரீமாந் வேங்கடநாத₂ார்ய: கவிதார்க்கிககேஸரீ ।
வேத₃ாந்தாசார்யவர்யோ மே ஸந்நித₄த்தாம் ஸத₃ா ஹ்ருதி₃ ॥

திருமங்கையாழ்வார் அருளிச்செய்த

# ॥ தன்னை நைவிக்கிலேன் ॥

*This document* has been prepared by*

***Sunder Kidambi***

*with the blessings of*

ஸ்ரீ ரங்க₃ராமாநுஜ மஹாதே₃ஶிகன்

**His Holiness *śrīmad āṇḍavan* of *śrīraṅgam***

*This was typeset using skt, LaTeX, Itrans, and the iitmtam font.

ஸ்ரீ:
ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# ॥ தன்னை நைவிக்கிலேன் ॥

திருப்புல்லாணி - 1

‡தன்னை நைவிக்கிலேன்⋆ வல் வினையேன் தொழுதுமெழு⋆
பொன்னை நைவிக்கும்⋆ அப்பூஞ்செருந்தி மண நீழல்வாய்⋆
என்னை நைவித்து⋆ எழில் கொண்டகன்ற பெருமான் இடம்⋆
புன்னை முத்தம் பொழில் சூழ்ந்து⋆ அழகாய புல்லாணியே (1)

உருகி நெஞ்சே! நினைந்திங்கிருந்தென்⋆ தொழுதும் எழு⋆
முருகு வண்டுண் மலர்க் கைதையின்⋆ நீழலில் முன்னொருநாள்⋆
பெருகு காதன்மை⋆ என்னுள்ளம் எய்தப் பிரிந்தான் இடம்⋆
பொருது முந்நீர்க் கரைக்கே⋆ மணியுந்து புல்லாணியே (2)

ஏது செய்தால் மறக்கேன்⋆ மனமே! தொழுதும் எழு⋆
தாது மல்கு தடம் சூழ் பொழில்⋆ தாழ்வர் தொடர்ந்து⋆ பின்
பேதை நின்னைப் பிரியேன் இனி⋆ என்றகன்றான் இடம்⋆
போது நாளும் கமழும்⋆ பொழில் சூழ்ந்த புல்லாணியே (3)

கொங்குண் வண்டே கரியாக வந்தான்⋆ கொடியேற்கு⋆ முன்
நங்கள் ஈசன்⋆ நமக்கே பணித்த மொழி செய்திலன்⋆
மங்கை நல்லாய்! தொழுதும் எழு⋆ போய் அவன் மன்னும் ஊர்⋆
பொங்கு முந்நீர்க் கரைக்கே⋆ மணியுந்து புல்லாணியே (4)

உணரில் உள்ளம் சுடுமால்⋆ வினையேன் தொழுதும் எழு⋆
துணரி ஞாழல் நறும் போது⋆ நம் சூழ் குழல் பெய்து⋆ பின்
தணரில் ஆவி தளரும் என⋆ அன்பு தந்தான் இடம்⋆
புணரியோதம் பணிலம்⋆ மணியுந்து புல்லாணியே (5)

எள்கி நெஞ்சே! நினைந்திங்கிருந்தென்⋆ தொழுதும் எழு⋆
வள்ளல் மாயன் மணிவண்ணன் எம்மான்⋆ மருவும் இடம்⋆
கள் அவிழும் மலர்க் காவியும்⋆ தூமடல் கைதையும்⋆
புள்ளும் அள்ளல் பழனங்களும் சூழ்ந்த⋆ புல்லாணியே (6)

www.prapatti.com

பரவி நெஞ்சே! தொழுதும் எழு⋆ போய் அவன் பாலமாய்⋆
இரவும் நாளும் இனிக்⋆ கண் துயிலாதிருந்தென் பயன்⋆
விரவி முத்தம்⋆ நெடு வெண் மணல் மேற் கொண்டு⋆ வெண் திரை
புரவியென்னப் புதம் செய்து⋆ வந்துந்து புல்லாணியே (7)

அலமும் ஆழிப் படையும் உடையார்⋆ நமக்கன்பராய்⋆
சலமதாகித் தகவொன்றிலர்⋆ நாம் தொழுதும் எழு⋆
உலவு கால்நற் கழியோங்கு⋆ தண் பைம் பொழிலூடு⋆ இசை
புலவு கானல்⋆ களி வண்டினம் பாடு புல்லாணியே (8)

ஓதி நாமம் குளித்துச்சி தன்னால்⋆ ஒளி மா மலர்⋆
பாதம் நாளும் பணிவோம்⋆ நமக்கே நலம் ஆதலின்⋆
ஆது தாரான் எனிலும் தரும்⋆ அன்றியும் அன்பராய்⋆
போதும் மாதே! தொழுதும்⋆ அவன் மன்னு புல்லாணியே (9)

‡இலங்கு முத்தும் பவளக் கொழுந்தும்⋆ எழில் தாமரைப்⋆
புலங்கள் முற்றும் பொழில் சூழ்ந்து⋆ அழகாய புல்லாணிமேல்⋆
கலங்கல் இல்லாப் புகழான்⋆ கலியன் ஒலிமாலை⋆
வலங்கொள் தொண்டர்க்கிடம் ஆவது⋆ பாடில் வைகுந்தமே (10)

‖ திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம் ‖

www.prapatti.com